International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# சமயம் வளர்த்த சைவ, வைணவத் திருமடங்கள்

# (Role of Maths in developing Saivism and Vaishnavism)

**மு.கயல்விழி,**

**தமிழ் ஆய்வாளர்,**

**வாலாசாப்பேட்டை, (இரா. மா).**

**ஆய்வுச்சுருக்கம்**: தமிழகச் சமய வரலாற்றில் திருமடங்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. தமிழகத்தில் சைவ, வைணவ மடங்கள் தோன்றி இந்து சமயத்தை நன்கு வளர்த்தன.சமய அடியார்களுக்கு ஊக்கமளிக்கும் ஊக்க மருந்தாய் அவை திகழ்ந்தன. நாடு முழுவதும் தோன்றி வளர்ந்த இம்மடங்கள் இன்றும் காணக்கிடப்பது அவற்றின் இன்றியமையாத தன்மையை உணர்த்தும். தமிழ் மன்னர்கள் இம்மடங்களின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் இடையறாது நல்கினர். தமிழ்நாட்டில் தோன்றிய இம்மடங்கள் தமிழையும் கல்வியையும் வளர்ப்பதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

**கருச்சொற்கள்**:திருமடங்கள்- சமய வளர்ச்சி- கல்வி வளர்ச்சி- நூல் நிலையங்கள் -அரசர்கள் ஆதரவு

**அறிமுகம்**

தமிழர்கள் சமயப்பற்று மிக்கவர்கள். அவர்கள் வாழ்வில் எல்லா நிலைகளிலும் சமயம் தொடர்பு கொண்டிருந்தது. அந்தச் சமயத்தை வளர்க்கும் அமைப்புகளாகக் கோயில்களும் மடங்களும் திகழ்ந்தன. கோயில்களைப் போன்றே மடங்களும் மக்களிடம் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. துறவு நெறி பூண்டொழுகும் சமயப் பெரியார்களுக்காக இம்மடங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றாலும் அவை பல்வகைச் சமுதாயப் பணிகளையும் சமயப் பணிகளையும் ஆற்றி மக்களின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றன. பல்லவர் காலத்தில் தமிழகத்திற்கு வருகை புரிந்த காளாமுகர்களின் வருகையால் இம்மடாலய முறை (Monasey Sysem) தோன்றி வளர்ந்தது. சங்க காலத்தில் மடங்கள் ஏதும் காணப்படாமை இதை உணர்த்தும். மக்களிடம் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்த இம்மடங்களைத் தமிழ் மன்னர்களும் அவ்வழியே சென்று ஆதரித்துப் புரந்தனர். இடைக்காலத் தமிழ் மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்த இம்மடங்ளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மடங்களின் அமைப்பு**

தமிழகத்தில் உள்ள மடங்கள் திருக்கோயில்களைப் போன்றே சிறந்த கட்டமைப்புடன் செயல்பட்டன. இம்மடத்தின் தலைவர்கள் “மடபதிகள்” என்றழைக்கப்பட்டனர். இம்மடபதிகளே பிற்காலத்தில் “மடாதிபதிகள்” என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் “ஆச்சாரிய சந்தானங்கள்” என்றும் சிறப்புடன் அழைக்கப்பட்டனர். பொதுவாக கோயில்களை ஒட்டியே இம்மடங்கள் காணப்பட்டன. இம்மடங்களில் ஏராளமான பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். இங்கு பலவிதச் சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. இம்மடங்களில் நூல் நிலையங்களும், மருத்துவ விடுதிகளும், உணவுச் சாலைகளும், கலைக் கூடங்களும் சிறப்புடன் செயல்பட்டன. கோயில் நூலகங்கள் யாவும்

"சரஸ்வதி பண்டாரங்கள்" என்று அழைக்கப்பட்டன (இராமன்.கே.வி.ப:239). சிதம்பரத்திலும் சேரன் மாதேவியிலும் செயல்பட்ட சரஸ்வதி பண்டாரங்களை இதற்குச் சான்றாகக்கூறலாம். இம்மடங்களில் செயல்பட்ட மருத்துவ மனைகளில் மனிதருக்கு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும் வைத்தியம் செய்யப்பட்டது(Neelakana Sastri.K,A, PP:651-652).கேரளாவில் செயல்பட்ட விலங்கு வைத்தியச் சாலை இதற்குச் சான்று. இம்மடங்களில் பணியாற்ற ஆசிரியர்கள், மருத்துவர்கள், கணக்கர்கள், நடன மாதர்கள், பாடு மகளிர்கள், ஓதுவார்கள், பார்ப்பனச் சமையலர்கள், பணி மக்கள், வேலையாட்கள், காவலர் போன்றோர் பணியாற்றினர். இது தவிர மட அடிமைகள் என்று பலரும் விலைக்கு வாங்கப்பட்டு இங்குப் பணிபுரிந்தனர் (A.R.E.No:409/1925). இதற்கு அடையாளமாக அவ்வடிமைகளின் கழுத்துப் பகுதியில் மடத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டது (A.R.E.No:91/1926). (மேல் நாடுகளில் குறிப்பாக உரோமாபுரியில் இது போன்ற அடிமைகளின் கைகளில் முத்திரை பொறிக்கப்பட்டது).

**மடங்களின் பணிகள்**

இம்மடங்கள் வழிப்போக்கர்களுக்கும் ஏழைகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் அனாதைகளுக்கும் மடப் பணியாளர்களுக்கும் தினமும் உணவளித்தன.இதுதவிர இம்மடங்களில் மாணவர்களுக்குச் சமயக் கல்வியும் உரிய ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்பட்டது. இங்கு திருமுறைகள், பிரபந்த நூல்கள் தவிர வடமொழி வேதங்களும் புராணங்களும் போதிக்கப்பட்டன.இலக்கணம், தரிசனம், சித்தாந்தம், யோக நூல், புராணங்கள், செய்யுள், நாடகம், தருக்கம், இசை, ஓவியம் போன்ற இயல்கள் மடங்களில் போதிக்கப்பட்டன. மடங்களில் சிறப்புடன் கல்வி போதிக்கப்பட்ட செய்தியைத் திருநாவுக்கரசர்,

"கல்வி கரை இலாத காஞ்சிமா நகர் தன்னுள்ளால்

எல்லியை விளங்க நின்றார்-இலங்கு மேற்றளியனாரே"

(தேவாரம்-திருமேற்றளி பதிகம்:பாடல்:431)

என்ற பாடல் மூலம் பதிவு செய்கின்றார். பல ஆலயங்களின் நிர்வாகத்தையும் மடங்களே ஏற்று நடத்தின. பல ஆலயங்களுக்கு மடாதிபதிகளே நிர்வாகிகளாக இருந்தது இதை உணர்த்தும். இவ்வாறு பல்வகைப் பணிகளை இம்மடங்கள் செய்து வந்தாலும் இவற்றின் முதன்மையான பணியாகச் சமயம் வளர்த்தலே திகழ்ந்தது. அவை பக்திக் கொள்கைகளை நாடுமுழுவதும் பரப்பின. மடாதிபதிகள் சமயத்துடன் பண்பாட்டையும் தத்துவத்தையும் வளர்த்து வந்தனர். நாட்டில் உள்ள சைவ, வைணவச் சமயத்திற்கு இவர்களே தலைமை பொறுப்பேற்றனர். இவர்கள் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய கோயில்கள் சிறப்புற்றுத் திகழ்ந்தன. இந்நிர்வாகிகளைத் "திருக்கோயில் மகேஸ்வரர்கள்" என்று கல்வெட்டுகள் சாலவும் புகழ்கின்றன(சோழர்வரலாறு,ப:306).இம்மடங்களில் திருப்பதிகங்களும் பிரபந்த நூல்களும் தினமும் முறையாக ஓதப்பட்டன. கோயில்களை ஒட்டியே மடங்களும் வளர்ந்ததால் கோயில் விழாக்களுக்கும் பூஜைகளுக்கும் இம்மடங்கள் தாராளமாக நிதி உதவி வழங்கின. இவ்வாறு தமிழ் நாட்டுத் திருமடங்கள் சமயக் கல்வியையும் சமயநெறி முறைகளையும் இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டன.

**மடங்களின் செல்வாக்கு**

தமிழ்நாட்டில் சிறப்புடன் செயல்பட்டு வந்த மடங்களை அரசர் முதல் சாமானியர் வரை போற்றிப் பாதுகாத்தனர். இதனால் இவை செல்வத்திலும் செல்வாக்கிலும் செழித்துத் திளைத்தன. மடங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் யாவும் "மடப்புறம்" என்று அழைக்கப்பட்டன (Swaminathan.A.. P:146). அவை இறையிலி நிலங்களாகத் தானம் வழங்கப் பட்டன. இதில் வரும் வருவாயைக் கொண்டே இம்மடங்கள் செயல்பட்டன. இம்மடங்களுக்குப் பல்வகையினர் ஏராளமாகத் தானங்கள் வழங்கியதற்குச் சான்றுகள் உள. சான்றாகக் கொடும்பாளூரில் உள்ள காளாமுக மடத்திற்குப் பூதிவிக்கிரம கேசரி என்ற சிற்றரசர் 11 கிராமங்களைத் தானமாக வழங்கினான் (A.R.E..No:101/1915).திருவேந்திபுரத்து மடத்துக்கு முதலாம்

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் இறையிலி நிலங்களைத் தானமாக வழங்கினான். ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் மதுரை திருஞானசம்பந்தர் மடத்திற்கு மானியம் வழங்கிச் சிறப்பித்தான். மாறவர்வமன் சுந்தர பாண்டியன் திருநெல்வேலி செய்ய நம்பிராட்டி மடத்திற்கு நிலங்களைத் தானம் வழங்கினான் (A.R.E..No:292/1914).

அரசர்கள் தவிரப் பிறரும் மடங்களுக்குத் தாராளமாகத் தானம் வழங்கினர். திருப்புத்தூர் திருஞான சம்பந்தர் மடத்திற்கு அரசு அதிகாரியான திருக்கான பேருடையான் மாளவசக்கரவத்தி என்பவன் நிலங்களைத் தானமாக வழங்கினான். இவனே கருங்குளம் நல்ல பெருமாள் மடத்திற்கும் தானம் வழங்கினான்(பாண்டியர் வரலாறு. ப-ள்:218-219). சிதம்பரம் கந்தாபரணன் என்பவனின் பேரன் சுப்பிரமணியன் சிவன் என்பவன் கோவிந்த புத்தூர் மடத்திற்கு நிலங்களை அளித்தான். தஞ்சை அகத்திய தேவன் மடத்திற்குக் கௌதமன் ஆண்டான் குன்றமெறிந்தான் என்பவன் 150 பணம் தானமாக வழங்கினான். சமூகத்தில் ஏழைகளான திருநெல்வேலி தச்சர்கள் தம் வருவாயில் ஆறில் ஒரு பங்கை அவ்வூர் மடத்திற்குத் தானமாக வழங்கினர் என்பதிலிருந்து இம்மடங்கள் சமூகத்தில் பெற்றிருந்த செல்வாக்கை உணரலாம் (A.R.E..No:295/1941). இது தவிர புகழ் பெற்ற குடுமியான் மலையில் உள்ள நாற்பத்தெண்ணாயிரவன் மடத்திற்கு மடப்புற நிலம் தானமாக வழங்கப்பட்டிருந்தது. காளையார் கோயிலிருந்த திருவாரூர் தட்சண கோளகி மடத்திற்கு இடைக் காட்டூரில் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டிருந்தன. இராமேஸ்வரம் சுந்தர பாண்டியன் மடத்தில் துறவிகளுக்கு தினமும் உணவளிக்க பாண்டிய மன்னர்கள் நிலங்களை தானமாக வழங்கினர் (A.R.E..No:197/1943-44).

**தமிழ் நாட்டு மடங்கள்**

தமிழ் நாட்டில் பல்லவர் காலம் முதல் பலவித மடங்கள் சிறப்புடன் செயல்பட்டு வந்தன. அதற்கு முன் செயல்பட்ட மடங்கள் பற்றி செய்திகள் ஏதும் கிடைத்தில. மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.847-869) காலத்தில் கச்சி மேற்றளிக்கு அருகில் ஒரு மடம் அமைந்திருந்தது. காவேரிப்பாக்கத்து வரதராச பெருமாள் கோயில் அருகில் நிருபதுங்க வர்மன் (கி.பி.865-906) காலத்தில் ஒரு மடம் காணப்பட்டது. இதை "மடத்தைச் சப்தப் பெருமக்கள்" என்றுரைக்கும் கல்வெட்டு வாசகம் உணர்த்தும்(இராசமாணிக்கம் பிள்ளை.மா.ப:258). பல்லவர் காலத்தைச் சார்ந்த அப்பர் பெருமான் திருப்பூந்துருத்தியில் மடம் ஒன்றை அமைத்தார். இச்செய்தியைப் பெரிய புராணம்,

"அங்குறை யுந்தன்மை வேண்டி "நாமடி போற்றுவ" தென்று

பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய பாடல் புரிந்து

தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரானாரருள் பெற்றுத்

திங்களு ஞாயிறுந் தோயும் திருமட மங்கொன்று செய்தார்"

(பெரிய புராணம்-திருநாவுக்கரசு நாயனார் புராணம். பா:389)

என்று சான்றுரைக்கும். அப்பர் இம்மடத்தில் தங்கியிருந்து "பல்வகைத் தாண்டகம்", "தனித்திரு தாண்டகம்", "அடைவுத் திருதாண்டகம்", "திருவரங்க மாலை" போன்ற நூல்களை இயற்றினார். அப்பூதியடிகள், குங்கிலியக் கலியர், முருக நாயனார், அப்பர், சம்பந்தர் போன்ற நாயன்மார்கள் பல மடங்களை ஏற்படுத்தினர். அப்பர் சம்பந்தர் இருவரும் திருவீழிமிழலையில் உள்ள மடத்தில் தங்கி இருந்த செய்தி மடங்களின் இருப்பை உணர்த்தும் (Meenakshi.C. P:209). பல்லவர் காலத்திற்குப் பின்னர் நாடு முழுவதும் பல்வகை மடங்கள் தோன்றி சிறப்புடன் பணியாற்றின.

**கோளகி மடம்**

இம்மடத்தில் பாசுபதர், லகுலீசர், காளாமுகர் போன்ற சைவப்பிரிவினர் வாழ்ந்தனர். கோளகி மதப்பிரிவு பத்தாம் நூற்றாண்டு அளவில் தமிழ்நாட்டில் நுழைந்தது. பின்னர் இது நாடு முழுவதும்

பரவியது. மத்திய இந்தியாவில் காலசூரி அரசர்களால் இப்பிரிவு ஆதரிக்கப்பட்டது. சோழர்கள் கன்னட நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற பொது அதன் மூலமாகத் தமிழகத்தினுள் இப்பிரிவு நுழைந்தது. இவ்வகை மடத்தில் வாழ்ந்த காளாமுகப் பிரிவினர் பெரும் கல்வியாளர்களாகவும் ஒழுக்கச் சீலர்களாகவும் பக்திமான்களாகவும் திகழ்ந்தனர். இத்துறவிகள் மணல் மீது படுத்தும் மந்திரங்கள் ஜெபித்தும் பதிகங்கள் பாடியும் உழவாரப் பணிபுரிந்தும் வாழ்ந்தனர். இவர்கள் பெயர்கள் “இராசி” , “சக்தி” , “அபரண” என்று முடியும். இவர்கள் மடத்தலைவர்களாகவும் கோயில் கண்காணிப் பாளர்களாகவும் சமயக் குருமார்களாகவும் கல்விச் சாலையின் தலைவர்களாகவும் இராஜ குருக்களாகவும் பணியாற்றினர்.

இவ்வகை கோளகி மடம் அம்பாசமுத்திரத்தில் உள்ள வாலீஸ்வரம் என்ற இடத்தில் சிறப்புடன் செயல்பட்டது. இம்மடத்தின் தலைவர்களாகப் புகலிப் பெருமாள், அகோரத் தேவர் போன்றவர்கள் பணியாற்றினர். புகலிப்பெருமாள் இம்மடத்திலிருந்தே “திருஞானம்” என்ற நூலை இயற்றிப் புகழ் பெற்றார் (A.R.E..No:359/1916).இதே வகை மடம் ஒன்று கி.பி. 1250 திருச்செந்தூர் ஆற்றூரில் செயல்பட்டது. இம்மடத்தின் தலைவர்களாக எல்லையில்லாத் தேவர், மகாதேவர், சிவபாத இருதயர், அஸ்திரத் தேவர், இராவளர், பசுபதி தேவர், நீலகண்ட தேவர், உய்யகொண்ட தேவர், அணுக்க வன்தொண்டர் போன்ற மடத்தலைவர்கள் சிறப்புடன் பணியாற்றினர். மேலும் இதேவகை மடம் சிதம்பரம் மேலச்சேரியில் பதஞ்சலி தேவர் மடம் என்ற பெயரிலும் திருவாரூரில் அழகியான் திருமடம் என்ற பெயரிலும் சோழ வந்தான் தென்கரையில் திருஞானசம்பந்தர் மடம் என்ற பெயரிலும் கோவிந்த புத்தூரில் திருத்தொண்டைமான் மடம் என்ற பெயரிலும் சிறப்புடன் செயல்பட்டன. மேலும் மேல்பாடியில் காளாமுகர் மடம் ஒன்றும் லகுலீச பண்டிதர் என்பவர் தலைமையில் செயல்பட்டது. மதுரை இடைக்காட்டூரில் தட்சணக் கோளகி மடம் ஒன்றும் செயல்பட்டது (ஆவணம். ஜீலை,1997,ப:50).

**கோமடம்**

இம்மடம் லகுலீச பாசுபதர்களால் நடத்தப்பட்டது. இலகுலீசர் என்பவர் தோற்றுவித்த சைவச் சமயப் பிரிவே பாசுபதமாகும். குஜராத்தைச் சார்ந்த இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இப்பிரிவைத் தோற்றுவித்தார் என்பர். ஈசனின் அவதாரமாகக் கருதப்படும் இவர் “காரணம்”, “காரியம்”, “கலை”, “விதி”, “யோகம்”, “விடுதலை” போன்ற யோக சாதனைகளைப் போதித்தார். இப்பிரிவினர் “மகேஸ்வரர்கள்” என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் திருநீறு பூசி லிங்கத்தை ஆடையின்றி சிவனை வழிபட்டனர். இவர்கள் சிறு கணங்களையும் வழிபட்டு அத்தெய்வங்களுக்காக மக்களையும் விலங்குகளையும் பலியிட்டனர். இவ்வமைப்பு கி.பி. 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கால் பதித்தது. இதன் தலைமை இடம் குஜராத்தில் செயல்பட்டது. இவ்வகை மடம் ஒன்று கொடும்பாளூரில் பூதி விக்கிரமக் கேசரி என்ற மன்னரால் ஆதரிக்கப் பெற்றது (A.R.E..No:101/1915). இம்மடத்தின் மடாதிபதியாக வித்யாராசி, தபோராசி என்ற அறிஞர்களின் தலைசிறந்த மாணவரான மதுரையைச் சார்ந்த மல்லிகார்ஜுனர் என்பவர் பணியாற்றினார். இதன் கிளை மடம் ஒன்று பொன் விளைந்த களத்தூரில் செயல்பட்டது. இதற்குத் தலைவராகச் சைவராசி மற்றும் ஞானராசி என்பவர்களுடைய தலைசிறந்த மாணாக்கரான பரஞ்சோதி என்பவர் பணியாற்றினார். இது தவிர இவ்வகை மடங்கள் திருவலஞ்சுழி, பந்தணை நல்லூர் போன்ற இடங்களிலும் செயல்பட்டன. திருத்துறை பூண்டியில் களப்பால் என்ற இடத்திலும் கோமடம் ஒன்றும் செயல்பட்டது (S.I.I.Vo:8, No:266).

**காபாலிகர் மடம்**

இம்மடம் காபாலிகர் என்ற பிரிவினரால் நடத்தப்பட்டது. காபாலிகப் பிரிவினர் பைரவரை வழிபாடு செய்தனர். மண்டையோட்டு மலை அணிந்து மனிதரை பலியிட்டு இறைவனை வழிபட்டனர். இறைச்சி, மது போன்றவற்றைத் தாராளமாக அருந்தினர். இவர்களே ஆதிசக்தி வழிபாட்டைத் தமிழகத்தில் கொண்டு வந்து சக்தி வழிபாட்டு முறையை ஏற்படுத்தினர். இம்மடத்தைக் காரணை விடங்கர் என்ற அறிஞர் தோற்றுவித்தார். தமிழ்நாட்டில் இம்மடம் திருவொற்றியூரில் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மடத்தின் தலைவராக நிரஞ்சனக் குரவர் என்ற அறிஞரின் சீடரான சதுரானந்த பண்டிதர் என்பவர் பணியாற்றினார். இம்மடத்தின் தலைவர்கள் சதுரானன் பண்டிதர் என்ற பெயரிலே அழைக்கப்பட்டனர் (A.R.E..No:368/1911). தமிழ் நாட்டில் காளாமுக மடம் ஒன்று ஏகம்பரநாதர் கோயிலுக்கு அடுத்து அமைந்திருந்தது என்ற செய்தியை மத்த விலாசபிரஹசனம் (Matavilasa Prahasana) என்ற நூல் மூலம் அறியலாம். காஞ்சியில் காளமுகப் பிரிவினர் அதிகம் வாழ்ந்தனர் என்று இந்நூல் உரைக்கும். புகம் பெற்ற மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலை அடுத்து ஒரு காபாலிக மடமும் செயல்பட்டது.

**வீரசைவ மடம்**

வீரசைவம் என்ற அமைப்பைத் தமிழகத்தில் திருமூலரே தொடக்கி வைத்தார். சில ஆய்வாளர்கள் கல்யாணபுரத்தை ஆண்ட பிஜ்லன் என்ற அரசனின் அமைச்சரான பசவர் என்பவரே இதைத் தொடக்கினார் என்று கருதுவர் (நீலகண்ட சாஸ்திரி.க.அ. ப:199). ஆனால் வீரசைவம் என்பது பழம் சைவப் பிரிவே என்று பலர் கருதுகின்றனர். இவ்வகை மடம் ஒன்று கும்பகோணத்தில் சிறப்புடன் செயல்பட்டது. இம்மடத்தின் தலைவர்கள் "மகேஸ்வரர்கள்" என்று அழைக்கப்பட்டனர். சோழர் காலத்தில் இம்மடத்தின் சிறப்பும் வளர்ச்சியும் உச்ச நிலையை எட்டிற்று. இதனைக் கண்ணுற்று வியந்த ஒட்டக்கூத்தர் தன் தக்கயாக பரணியில்,

"குடந்தையம் பரியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே"

என்று இதன் சிறப்பை உரைப்பதைக் காணலாம் (தக்கயாக பரணி. பக்:255).

**கொல்ல மடம்**

இவ்வகை மடம் வாரணாசியைத் தலைமையிடமாகக் கொண்டது. தமிழ்நாட்டில் இவ்வகை மடம் திருப்பாச்சூரில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் "ஓங்காரச் சிவராவன்" என்பர் தலைமையிலும் பிரான்மலையில் "ஈசான சிவராவன்" என்பவர் தலைமையிலும் சிறப்புடன் செயல்பட்டது. தமிழகத்தின் மீது படையெடுத்து வந்த ஹொய்சாள அரசன் வீர வல்லாளன் திருவானைக்காவில் ஒரு கொல்ல மடத்தை ஏற்படுத்தினான் (A.R.E..No:21/1891). இதில் புகழ்பெற்ற அறிஞர் "சத்புருஷம் சிவம்" என்பவர் பணியாற்றினார்.

**பிக்ஷா மடம்**

இது கோளகி பிரிவின் மடமாகும். இவ்வகை மடம் பந்தணை நல்லூரில் முன்றாம் குலோத்துங்கன் காலத்தில் "இராவளர்" என்பவர் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டது(A.R.E..No:72/1930-31). இதே காலத்தில் திருப்புத்தூரில் இராசேந்திர முதலியார் மடம் என்ற பெயரிலும் சைவபிரகாசர் மடம் என்ற பெயரிலும் செயல்பட்டு வந்தன. திருநெல்வேலியில் மானபடை வீடு என்ற ஊரில் இதன் கிளைமடம் ஒன்று செயல்பட்டது. தேவிகாபுரத்தில் ஈசான சிவாச்சாரியார் என்பவர் இது போன்றதொரு மடத்தைச் சிறப்புடன் நடத்திவந்தார் (A.R.E..No:352/1912).

**பிறவகை சைவ,வைணவ மடங்கள்**

தமிழகம் முழுவதும் சைவ வைணவ மடங்கள் ஏராளமாகச் செயல்பட்டு வந்தன என்பதற்குச் சான்றுகள் உள. திருசந்தி முற்றத்து மடங்கள் 13 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சிறப்புடன் செயல்பட்டன. ஆண்டார் பருதிப் பெருமாள் என்பவர் திருவானைக்காவில் இம்மடத்தைத் துவக்கி வைத்தார். இதன் தலைவராக "நமசிவாயத் தேவர்" என்பவர் பணியாற்றினார் (A.R.E..No:586/1908). இதன் கிளை மடங்களான ஊசாத்தானம் கூத்தாடும் நாயன்மார் மடத்தில் பரிபூரணச் சிவாச்சாரியாரும் திருவீழிமிழலை அழகிய திருச்சிற்றம்பலமுடையான் மடத்தில் "தவப் பெருமாள்" என்பவரும்

வலிவலம் தவப்பெருமாள் மடத்தில் "சோம தேவர்" என்பவரும் மடாதிபதிகளாக விளங்கிச் சைவப் பணியாற்றினார்.

திருமாளிகை மடம் திருவிடை மருதூரில் செயல்பட்டது. கி.பி.1240 இல் இம்மடத்தின் தலைவராகத் "தத்தன் உடையான் ஈசான தேவன்" என்பவர் பணியாற்றினார் (A.R.E..No:49/1911). இதே வகை மடம் தில்லையில் "விநாயகர்" என்ற பெரியாரின் தலைமையில் செயல்பட்டது. புகழ் பெற்ற சைவ அறிஞரான "பெரும்பற்றப் புலியூர் நம்பி" இம்மடத்தில் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செம்பைக்குடி மடம் செம்பைக்குடியில் செயல்பட்டது (A.R.E.No:584/1908). இதன் தலைவராக "ஆண்டார்" என்பவர் பணியாற்றினார். இதன் கிளை மடம் ஒன்று கி.பி. 1250 அளவில் திருவனைக்காவில் எம்பிரானார் மடம் என்ற பெயரில் செயல்பட்டது

ஆச்சாரம் அழகியான் மடம் திருவாரூரில் செயல்பட்டது. இதன் கிளை மடம் திருப்புத்தூரில் திருஞான சம்பந்தர் மடம் என்ற பெயரில் செயல்பட்டது. இம்மடத்தின் தலைவராக "ஸ்ரீகண்டன் சிவன்" என்ற சைவப் பெரியார் பணியாற்றினார். இதே வகை மடம் ஒன்று கோவிந்த புத்தூரில் திருத்தொண்டர் தொகையான் மடம் என்ற பெயரில் செயல்பட்டது. தில்லையிலும் இதன் கிளை மடம் ஒன்றும் செயல்பட்டது (A.R.E.No:192/1929).

மருதப்பெருமாள் மடம் திருசெங்கட்டான் குடியில் செயல்பட்டது (A.R.E.No:76/1926). இது சிறுதொண்டர் மடம் என்றும் அழைக்கப்பட்டது. இதன் தலைவராக "நமசிவாயத் தேவர்" என்பவர் பணியாற்றினார்.

திருவியலூரில் உய்யவந்த தேவநாராயணன் என்பவரும் திருக்கடவூரில் உய்யவந்த தேவநாராயணன் என்பவரும் திருத் துறையூரில் அருள்நந்தி சிவாச்சாரியாரும் அவருக்குப் பின் சிவானந்த மாமுனியும் இம்மடங்களில் சிறப்பாகப் பணியாற்றிய பெரியார்கள் ஆவர் (A.R.E.No:380/1908). துறையூர் மடத்தில் தான் பரசமயக் கோளரி மாமுனிவர் என்பவர் புகழ்பெற்ற "கன்னிவள புராணம்" என்ற நூலை இயற்றினார். சிதம்பரத்தை அடுத்த கொன்றவன் குடியில் உமாபதி சிவாச்சாரியார் என்பவரும் திருவாவடுதுறையில் நமசிவாயத் தேசிகரும் தருமபுரத்தில் ஞானச் சம்பந்தத் தேசிகரும் சைவ மடங்களைத் துவக்கினர். இது தவிரத் திருச்சுழியில் மாவிரதிகள் மடம் செயல்பட்டது. அம்பாசமுத்திரம், தென்கரை, சிவபுரி, மதுரை போன்ற இடங்களிலும் பல்வகைச் சைவ மடங்கள் செயல்பட்டு வந்தன.

சேலத்தில் கிளிவண்ணமுடைய நாயனார் கோயிலருகே ஒரு மகேஸ்வர மடம் செயல்பட்டது (S.I.I.Vo:4, No:152). திருவேந்திபுரத்தில் இரண்டாயிரவன் மடமும் குடுமியான் மலையில் நாற்பத் தெண்ணாயிரவன் மடமும் தஞ்சை அகத்தியர் பள்ளியில் அகத்தியத் தேவர் மடமும் செயல்பட்டு வந்தன. புகழ் பெற்ற இராமேஸ்வரத்தில் சுந்தர பாண்டியன் மடம் செயல்பட்டு வந்தது (A.R.E..No:197/1943-44). திருநெல்வேலியில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தன் அத்தையின் நினைவாக நம்பிராட்டி மடம் என்ற மடத்தை நிறுவினான். நடுவில் கூற்றத்தில் இதே மன்னன் திரிதண்டி சன்னியாசிகளுக்காக ஓர் மடத்தை நிறுவினான் (A.R.E..No:99/1937-38). ஆந்திராவில் செயல்பட்ட அலோபில மடத்தின் கிளை ஒன்று திருநெல்வேலி வானமா மலையில் ஸ்ரீ வானமாமலை ஜீயரால் தொடங்கப்பட்டது. அழகர் கோயிலில் நாராயண மடமும் வானாதிராயன் மடமும் திருநாடுடையார் மடமும் குலசேகர மடம் போன்ற வைணவ மடங்கள் வைணவத் துறவிகளுக்காகச் செயல்பட்டு வந்தன. திருக்குறுங்குடியில் திருமங்கை மடமும் (A.R.E..No:350/1959-60) திருநகரியில் அருளாளதாசன் மடமும் புகழ் பெற்ற வைணவப் பெரியாரான திருக்குறுகூர் மாமுனியால் ஏற்படுத்தப்பட்டது. திருவரங்கத்தில் சுந்தர பாண்டியன் பெயரில் ஒரு மடம் சிறப்புடன் செயல்பட்டு வந்தது (A.R.E..No:122/1937-38). இது தவிரச் சேரன் மாதேவியில் முடிவழங்கும் பெருமாள் மடம் என்ற மடமும் சிறப்புடன் செயல்பட்டது (A.R.E.No:523/1959-60).

**தமிழர் சமய வாழ்வில் மடங்களின் தாக்கம்**

தமிழ்நாட்டின் சமய சமுதாய வரலாற்றில் மடங்களின் பங்கு அளப்பரியதாகும். அவை தமிழ் மக்களின் வாழ்வுடன் எல்லா நிலையிலும் பின்னிப் பிணைந்திருந்தன. திருக்கோயில்களுக்கு அடுத்து இம்மடங்களே தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்றன. மேலும் அவை சிறப்புடன் செயல்பட்டு அனைவரின் போற்றுதலையும் பாராட்டையும் பெற்றன. அவற்றின் சிறந்த கட்டமைப்பு அவை சிறப்புடன் செயல்பட ஏதுவாக அமைந்தது. பக்தி இயக்கக் காலத்தில் பௌத்த, சமண சமயத்தின் வீழ்ச்சிக்கும் இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்கும் காரணமான நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் இம்மடங்களே உறுதுணையாகத் திகழ்ந்தன. அரசர்களும் ஆலங்களும் வடமொழியை ஆதரித்த போது இம்மடங்கள் தமிழைப் போற்றி வளர்த்தன. வேளாளர்களே இம்மடங்களின் தலைவர்களாகப் பணியாற்றி இந்து சமயத்தையும் தமிழையும் வளர்த்தனர். இம்மடங்கள் தம் சிறந்த செயல்பாடு, சீறிய ஒழுக்க வாழ்வு, தன்னலமற்ற பொதுத் தொண்டு, பார்போற்றும் சமயப் பணி போன்றவற்றால் அரசர் முதல் ஆண்டி வரை அனைவரின் போற்றுதலையும் பாராட்டையும் பெற்றுத் தமிழரின் சமய வாழ்வினின்று பிரிக்கவியலா இடத்தைப் பெற்றன.

**நிறைவுரை**

தமிழ் நாட்டு திருமடங்கள் கல்விப்பணி, ஏழைகளுக்கு உணவளித்தல், மருத்துவச் சேவை வழங்குதல், கலைகளைப் பாதுகாத்தல் போன்ற பல்வகைச் சேவைகளை மக்களுக்குச் செய்து வந்தன. மேலும் அவை இயற்கை சீற்றம் நிகழ்ந்த போது சமூகப்பணியும் செய்தன. மேல் நாடுகளிலும் இதே போன்ற மடங்கள் ஐரோப்பா முழுவதும் காணப்பட்டன. அவை சமயத்துடன் சமூக, அரசியல், பொருளியல் வாழ்வையும் கட்டுப்படுத்தின. ஆனால் நம்நாட்டு மடங்கள் அவ்வாறில்லாமல் சமயத்தையும் தமிழையும் வளர்த்தலை மட்டுமே நோக்கமாகக் கொண்டு சமூகப் பணியும் கலைப்பணியும் புரிந்து வந்ததால் அவை அனைவரின் ஆதரவையும் போற்றுதலையும் பெற்றன. இடைக்காலத்தில் அனைத்துத் துறைகளிலும் புராதன இந்து சமயத்தையும் பழம் சிறப்பு மிக்க தமிழையும் கட்டிக் காக்கும் நோக்குடன் தமிழர்கள் செயல்படுத்திய தலை சிறந்த சமயம் சார்ந்த கட்டமைப்பே இம்மடங்கள் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மையாகும்.

**சுருக்கம் (Abbevaons):**

1.A.R.E-Annual Report on Indian Epigraphy

2.S.I.I-South Indian Inscription

**கருவி நூற்பட்டியல்:**

[1] Pillai.K.K.(1969) A Social Hiistory of The Tamils, Chennai: University of Madras.

[2] Swaminathan.A,(1991),Social and Culutural Hiistory of Tamil Nadu, Chennai: Deepa Publictions.

[3] Neelakana Sastri.K.A. (1935), The Cholas, Chennai: University of Madras.

[4] Meenakshi.C, (1938), Administration And Social Life Under The Pallavas, University ofMadras

[5] நீலகண்ட சாஸ்திரி.க.அ. (1979), தென்னிந்திய வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[6] இராமன்.கே.வி,(1977), பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[7] தமிழ்நாட்டு வரலாறு- பாண்டியர் காலம் (2000) சென்னை: தமிழ் வளர்ச்சித் துறை

[8] தமிழ்நாட்டு வரலாறு- சோழப் பெருவேந்தர் காலம் (2000) சென்னை: தமிழ் வளர்ச்சித் இயக்ககம்

[9] இராசமாணிக்கம் பிள்ளை.மா, (2000), பல்லவர் வரலாறு, சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.